Separate service for Community Development.

* 308 Q.—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether separate service for Community Development is to be formulated; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: (அ) இல்லை, ஆனால் ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சியாளரின் ஊராட்சி வளர்ச்சிக்கான நேர்முக உதவி அலுவலரின் பதவியை மாவட்ட வளர்ச்சி அதிகாரியின் பதவியாக உயர்வுபடுத்தவும், கோட்ட ராட்சி அலுவலர்களின் பதவிகளை கெசட் பதிவு பெற்றதாகவும், வட்டாரங்களின் அமைப்பைப் புனரமைக்கவும் செயற் குறிப்புகள் அரசின் பரிசிலனையில் இருக்கின்றன.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன்: தலைவர் அவர்களே, இந்த சமுதாய வளர்ச்சிக்கு என்று தனியாக ஒரு பணி அதிகாரி அமைப்போமேயானால் இன்னும் சிறப்பாக செயல்பட முடியும். பல துறைகளில் இப்போது இருக் கின்ற அதிகாரிகளுக்கு வேலைப் பளு இருக்கிறது என்று அரசாங்கம் கருது கின்றதா? குறிப்பாக, தொழில் வளர்ச்சி அதிகாரிகள் அவர்களுக்கு அதிகம் வேலை பளு இருக்கிறது என்று கருதுகின்றதா? இல்லை என்றால் என்ன நட வடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: தலைவர் அவர்களே, வட்டார வளர்ச்சித் திட்டங்களுக்குத் தனியாக ஒரு துறை அமைப்பதில் பல சங்கடங்கள் ஏற் படும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர்கள் சுட்டிக்காட்டியதன் பேரில் இதிலே புனரமைப்பு செய்வது என்று நான் முன்பே குறிப்பிட்டு இருக்கிறேன். சில மாறுதல்களைச் செய்ய அரசாங்கம் ஆராய்ந்து கொண்டிருக்கிறது. அதன் காரணமாக தொழில் வளர்ச்சி அலுவலர்கள் இப்போது மிகவும் குறைக்கப் பட்டிருக்கிறார்கள். அவர்கள் வேலைக்குப் பளு அதிகம் இல்லை என்று அவர் களை எந்தெந்த துறையிலே பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதைப் பற்றி அரசாங்கம் யோசித்துக் கொண்டிருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே, ஊழியர்களை அமர்த்துவதற்கு தனி பப்ளிக் சர்விஸ் கமிஷன் அமைப்பதற்கு அரசாங்கத் தின் ஆலோசனையில் உள்ளதா? அப்படியானால் அதன் நிலைமை என்ன?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: அப்படிப்பட்ட விவரங்கள் எதுவும் இல்லை.

ஹாஜி ம. மு. பீர்முஹம்மது: பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் கூறுகின்ற நேரத்தில் வட்டார வளர்ச்சியை புனர் அமைப்பு செய்ய வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். சில ஊராட்சி ஒன்றியங்களில் 22 அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். வேறு சில ஊராட்சி ஒன்றியங்களில் 48, 50 அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். கிராம வளர்ச்சிப் பணிகள் துரிதமாக நடைபெற வேண்டுமானால் அதிகமாக ஊராட்சிகள் இருக்கிற ஒன்றியங்களை இரண்டாகப் பிரித்து செயல்படுத்த இந்த அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: கேள்வி இந்தத் துறையைப் புனரமைப்பு செய்வதைப்பற்றித்தான். உறுப்பினர் அவர்கள் ஒன்றியங்கள் புனரமைப்பு செய்வது பற்றிக் கேள்வி கேட்டிருக்கிறார்கள். ஒன்றியங்கள், மூன்று காரணங்கள் அடிப்படையில் வைக்கப்பட்டிருக்கிறது. மக்கள் தொகை, பரப்பளவு, கிடைக்கிற வருமானம். அங்கே இருக்கிற ஊராட்சி மன்றங்கள் அத்தனையும் கணக்கெடுத்துத்தான் செய்ய வேண்டியிருக்கிறது. சில இடங்களில் அதிகமாகவும் சில இடங்களில் குறைவாகவும் உள்ள ஊராட்சி மன்றங்கள் உள்ளன. அதைப் புனரமைப்பு செய்வது என்றால் அரசுக்கு நிறைய செலவாகும். அதைப் பரிசீலிக்கும் நிலைமை இல்லை.

திரு. வி. கே. கோதண்டராமன்: சார், இந்த சமுதாய அபிவிருத்தி பற்றி ஏற்கனவே திரு. முருகேச முதலியார் அவர்களைக் கொண்டு ஒரு கமிட்டி அமைத்து அவர் ரிப்போர்ட் கொடுத்திருக்கிறார். அந்த ரிப்போட்டின் அடிப்படையில் எல்லாக் கட்சிக்காரர்களையும் கொண்ட கூட்டம் வைத்து, அதில் மாநில அடிப்படையில் அதிகாரிகள் நியமிக்கப்படுகிறபோது, மாவட்ட அளவில் டிஸ்ட்டிரிக்ட் டெவலப்மெண்டு ஆபிஸர் என்ற அடிப்படையிலே நியமனம் செய்ய வேண்டுமென்று ஏகோபித்த முடிவு எடுத்ததே, அதை அமலாக்கும் உத்தேசம் உண்டா? அந்த ரிப்போர்ட் என்ன ஆனது?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: அந்த ரிப்போர்ட் அரசாங்கத்தின் கைவசம் பத்திரமாக இருக்கிறது. அதன் மீது பரிசீலனை செய்துதான் மாவட்ட வளர்ச்சி அதிகாரிகள், வட்ட வளர்ச்சி அதிகாரிகள் நியமிக்கப் போகிறோம். அந்த வகையில் மாவட்ட ஆட்சித் தலைவர்களைக் கலந்து ஆலோசித்து முடிவு செய்யப்படும்.

Scrutiny fee on lay-outs.

முற்பகல் 9-30. * 309 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether the Corporation of Madras is levying scrutiny fee on applicants for lay-outs from April 1969; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: (அ), (இ) ஒப்பளிப்பு பெறுவதற்காக மனைப்பிரிவு வரைப் படங்களை அனுப்புபவர்களிடமிருந்து அவ்வரைப் படங்களைப் பரிசீலனை செய்வதற்காகக் கட்டணம் எதுவும் விதித்து வசூலிக்கப்படுவதில்லை. வரைப்படங்கள் அனைத்து குறித்தும், தற்காலிக அடிப்படையில் ஒரு சதவீத சென்டேஜ் கட்டணமே வசூலிக்கப்படுகிறது.

திருவெறும்பூர் மின் அழுத்த தொழிற்சாலை பகுதியில் வீட்டு வரி.

* 310 வினா—திரு. வை சுவாமிநாதன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி, திருவெறும்பூரில் அமைந்துள்ள மின் அழுத்த தொழிற்சாலையில் வீட்டு வரி, தொழில் வரி முதலியன வசூல் செய்ய அரசு சம்பந்தப்பட்ட ஊராட்சிக்குத் தடை உத்தரவு இட்டுள்ளதா?